
# அம்பலம்

கலை இலக்கிய மாதாந்த சிற்றிதழ்

## “ஊர் கூடி தேர் இழுப்போம்”




15/-

## ஊர் கூடித் தேர் இழுப்போம்

உங்கள் கரங்களுக்கு...

அம்பலம் !
வாழ வேண்டுமென்ற
நம்பிக்கையோடு பிரசவிக்கப்பட்ட சிசு!
முன்பு தமிழ் இலக்கியம் செழித்த இடம் யாழ்ப்பாணம்!
எங்கெங்கோ எவனெவனோவெல்லாம்
இப்பொழுது
இலக்கியம் வளர்ப்பதாய்
மீசை முறுக்குகையில்
எம் மண்ணிலிருந்து – யாழிலிருந்து
இப்பொழுது இலக்கியச் சுருதி
மீட்டப்படவேயில்லை!
அதனால்தான்
மூத்த எழுத்தாளர் என்று சொல்வோர் கூ
முயற்சிக்காத பணியில்
இந்த விடலைகள் இறங்கியுள்ளோம்
இது பிரதேசவாதக் கொள்கையில்லை!
எங்கள் மண்ணிலிருந்து ஒரு
நாற்று வளர வேண்டுமென்ற நப்பாசை!
அவ்வளவே!
முதற்பிரசவமாதலினால்
குறைகள் நிச்சயம் நிரம்பவேயிருக்கும்
நாளடைவில் அக் குறைகள் நிரப்பப்படும்!
அம்பலம் நீங்கள்
விழித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக
வலிக்காமல் கிள்ளும்!
வரட்டு வேதாந்தத்தின் மீது வாள் வீசும்!
முகவரி தெரியாமல் மூழ்கியிருக்கும் இளம்
எழுத்தாளர்களைஇனம்காட்டும்
உங்கள் சுயம் பற்றிய தேடலை உங்களுக்கே தரும்
சிறுமை கண்டு பொங்கும்!
துருப்பிடித்துக் கிடக்கும் எழுதுகோல்களுக்கு
இது ஒரு சாணைக்கல்.
இருட்டறையில் மனிதம் நசுக்கப்படுகையில்
அதனை அம்பலத்துக்கு கொண்டு வரும்!
ஊரிலுள்ளோர் எல்லோரும் ஒன்றாய் வடம்பிடிக்க
தானாய் நகர்ந்து
அம்பலத்தில் இலக்கியத்தேர் இனிதே வரும்!
இது விஷப்பரீட்சைதான்!
இந்தச் சிசுவை வாழ வைப்பதும்
வளர வைப்பதும் இனி
உங்கள் கைகளில்.



அன்புடன்
அம்பலத்தார்

தேர்: – 01
ஊர்: – 01

தீவகத்தில் விடுதலைப் புலிகள் மீது
கடற்படையும் ஒரு தமிழ் தேசவிரோதக்
கட்சியும் இணைந்து தாக்குதல் – செய்தி









# தமிழ்த் திரைப்படம் மீதான சில பதிவுகள்

காலம் காலமாக தமிழ் சினிமா செய்யும் உணர்வுகளை வசப்படுத்தி அழ வைக்கும் மரபுகளிலிருந்து விடுபட்டு நிற்கும் ஒரு தமிழ்த் திரைப்படம் "அழகி".

ஒரு ஆழமான கவிதை போல் அதனை படித்த பின்பு ஏற்படும் சுகானுபவத்தை தருவது மன மூலையில் ஒளித்துக் கிடக்கும் மெல்லிய நிறைவுகளை ஒவ்வொரு ஓவியமாக எடுத்துத் தந்திருக்கின்றார்கள்.

கிராமத்து நினைவுகளும் கிராமத்து பாடசாலை நினைவுகளும் மனதுக்குள் துளிராய் முளைவிட்டு நிற்கும் இளம் காதலையும் திரும்பவும் மீட்டுத் தருகின்ற ஒரு நினைவு இத்திரைப்படம்.

தமிழ் சினிமா காதலைக் காட்டி காசு பிழைத்துக் கொண்டிருக்க அல்லது சொல்லத் தெரியாமல் தவிக்கும் வேளையில், காதல் இப்படித்தான் இருக்கும் என்று உண்மையை தேடுவது இயற்கையாக இருக்கின்றது

காதலை அடிப்படையாக கொண்ட சினிமாவாக இருப்பினும் முக்கியமாய் அமைவது பாடசாலைக் கல்விக்காலம், அக்கால குறும்புகள் அவற்றால் மனதில் எழும் சந்தோச உணர்வுகள் அடுக்காய் பகிரப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஆசிரியர்கள் வழங்கும் தண்டனைகள், அதனால் ஏற்படும் உளவியல் பாதிப்புக்களையும் சுட்டிக் காட்டுதல் தண்டனை பற்றிய கேள்வியையும் பரீட்சை மையக் கல்வியின் நோக்கத்தின் அடைவுகளையும் மீள் பரிசோதனை செய்ய வேண்டியதையும் சுட்டுகின்றது.

பாடசாலையில் தோன்றும் பரஸ்பர அன்பு காதலுறவாக மாறுகின்றது. ஆனால் என்றைக்கும் வெளியே சொல்லாமல் ஆத்மார்த்தமாக அது மனதுக்குள் நிறைந்து கிடக்கின்றது. அது மாறவில்லை. குடியும் குடித்தனமும் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கத் தொடங்கிய பின்பும் அது மாறவில்லை. இதுவே காதலின் தீவிர விசுவாசத்தை குறிக்கும்.

இன்றை வரைக்கும் தமிழ் சினிமா நாவல் கதை யாவற்றிலும் காதலை ஒரு திருமணத்துக்கான கருவியாகவே பயன்படுத்தி இருக்கின்றது கருதியும் இருக்கின்றது.

எம்முடைய தனிப்பட்ட வாழ்விலும் காதலையும் திருமணத்தையும் ஒன்றாக்கி வைத்திருக்கின்றோம். காதல் திருமணத்தில் முடிந்தால் வெற்றி என்றும் அவ்வாறு இல்லாது விட்டால் தோல்வி என்றும் எமக்குள் ஒரு வரையறை. ஆனால் காதல் வெல்வதும் இல்லை. தோற்பதும் இல்லை. காதல் வேறு; திருமணம் வேறு என்பது இத் திரைப்படம் தரும் செய்தி.

வாழ்நாள் வரை காதலிக்கப்பட்டவர் மீது ஒரு விசுவாசத்தை கொண்டிருத்தலே உண்மைக் காதலுக்கு அழகு. இணைவு வந்தாலும் பிரிவு வந்தாலும் விசுவாசம் மனதில் நிறைந்திருக்க வேண்டும். இது எவ்வாறு சொல்லப்படுகின்ற-தென்றால் காதலியின் கணவனுக்கு தொழில் பெற்று தருதலும் அவளுக்கு அடைக்கலம் தருதலும் காதலியின் விசுவாசத் - துக்குரியவை.



காதலன் - (அதாவது நேசத்துக்குரியன்) பெயரை தனது மகனுக்கு சூட்டுவது – தமிழில் ஒரு சொற்பதம் உண்டு அது "அபிப்பிராயம்" என்பதாகும். அதாவது ஏக்கத்தை குறிக்கும் பேச்சு வழக்குச் சொற்பதம்.

சில இடங்களில் அவசரம் தெரிகின்றது. சினிமா உத்தி கையாளப்படவில்லை. நாடகப்பாணி வருகின்றது. சண்முகத்திற்கு அடிபட்டதும் காதலி துடித்தோடி வருவது அதிகப் பிரசங்கித்தனமாக இருப்பது சாதாரண பார்வையையே பயன்படுத்தியிருக்க முடியும்.

கிராமத்தில் இருந்து பலாப்பழத்துடன் வருபவர்களின் கோலம்.. த.பழமலய் .அவர்களின் கவிதையான "சாதியும் வர்க்கமும்" என்ற கவிதையை ஞாபகப்படுத்தி சிரிக்க வைக்கிறது.


மனதினில் ஒரு இழையோட்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் கலைப்படமாக அழகி திரைப்படத்தை கருதி தமிழ் சினிமாவில் ஒரு மைல் கல்லாக கொள்ள முடியும்.

-கோகுல ராகவன்-

## வண்ணமும் எண்ணமும்

இந்தபுகைப்படத்தினைப் பார்க்கும்பொழுது உங்கள் மனதில் எழுகின்ற எண்ணங்களைக் கவிதையாக எழுதி அனுப்புங்கள்.

சிறந்த கவிதை ஒன்றிற்கு ரூபா 100/- பரிசாக வழங்க எண்ணியுள்ளோம். உங்கள் ஆக்கங்கள் வந்தடைய வேண்டிய கடைசித் திகதி 20.08.2002.



# இறைவன் இறந்து விட்டான்

நீயாகி நானிருந்த
பொழுதுகளில்
அழுக்குப்பட்ட - இந்த
மனிதச் சட்டையை
எந்தச் சவர்க்காரம் கொண்டு
சலவை செய்வது?

இனியும்
அமாவாசைகளையே அதிகம்
அர்த்தப்படுத்திக் கொண்டிராமல்
ஒரு சூரியனைப் பிடித்து
என் வாழ்க்கை வாக்கியத்தில்
முற்றுப் புள்ளி வைக்கிறேன்

விரிந்து வரும்
உன் கனவுகளை
சுருக்கிக் கொண்டு
முற்றுப்புள்ளியோடு – ஒரு
முகூர்த்தம் தொடங்கட்டும்!

உனக்காக
என் சிறகை விறகாக்கி
அடுப்பெரித்த பின்தான்
தெரிந்தது - இந்த
பறவையின் பலவீனம்.!

கண்ணீர் – கவலை
தாகம் - சோகம்
ஏமாற்றம் - மாற்றம்
மரணம் - ரணம்

ஐயையோ.. ..!
சகதியின் முன்பிருந்து
நான்
சலசல கேட்க
ஆசைப்பட்டிருக்கிறேன்

ஆறுதல் கேட்டு
எரிமலை வாசல்முன்
எத்தனை நாள் நிற்பது?
பூக்கள் மேல்
நெருப்பள்ளி வீசினால்
வேர்களுக்குள்
வெடி வெடிக்கும்

இனி இந்த
சிறகின் விரிப்பில்
சில
சிகரங்கள் விரிக்கப்படும்!

புயலின் வயலில் - இந்த
நாற்று வாழ
வசதியில்லாத போது
தனக்குரிய தவச்சாலை நோக்கி
பறக்கிறது!

காயங்களைக் கடந்து
இந்த சண்டேஸ்வரன்
தன் கதவுகளைச்
சாத்தி விட்டு
வெளியே எழுந்து வருகின்றான்
காரணம் - உள்ளே
இறைவன் இறந்து விட்டான்!
இனி
எனக்குரிய தவம்
தலத்துக்கு வெளியே!

புயல்பூ -

# சண்டையை நிப்பாட்டுங்கோ

சி.கதிர்காமநாதன்

பவர் கட் ஆனபோது தமிழில் சொல்வதானால் "மின்சார நிறுத்தம்" ஏற்பட்ட போதுதான் இந்த யோசனை வந்ததென்பது எங்களுக்கு ஆச்சரியமான விஷயம்.

நாங்கள் என்பது நான், பிரதீபன், சண்முகம், ஆகிய மூவரும்தான்

"சரி அப்படி என்னதான் "வெளிச்சமான யோசனை எல்லாம் உங்களுக்கு தெரிந்த விஷயம் தான் இப்போது தானே இனப் பிரச்சினை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடுகள், பல காலமாக "இழுபட்டுக் கொண்டு இருக்கும் இனப் பிரச்சனையை தீர்ப்பதற்கு பல வழிகளில் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள்.

பக்கத்து நாடு, தெரிந்த நாடு, நெருங்கிய நாடு, தூரத்து நாடு, என எல்லா நாடுகளையும் பிரச்சினையை தீர்க்க "உதவுங்கோ, உதவுங்கோ" என்று கூப்பாடு போட்டு "மிக்" வேகத்தில் பறக்கிறார்கள்.

இப்படி பிரச்சனையை தீர்ப்பதற்கு வெளிநாடுகள் "உள்நாட்டுக்குள் தலையை கொடுத்து தாங்கள் தலை வைச்ச நாட்டின் பிரச்சனையை தீர்க்கின்றார்களோ இல்லையோ தாங்கள் விட்ட "தலையை" வெளியே எடுப்பதே பெரும் சிக்கலாகி தாங்கள் உள்நாடா வெளிநாடா என குழம்பி போகிறார்கள்.

சரி இவ்வளவு கஸ்ரப்பட்டும் உள்நாட்டு மோதலை நிறுத்த முடிந்ததா? அதுவும் வடபகுதி மின்சாரப் பிரச்சனை மாதிரி தொடர் கதைதான் இருந்தும் சில நாடுகள் தாங் கள் கால் வைத்த பிரச்சனை யிருந்து நழுவிப் போகாமல் சமாதானத்தை ஏற்படுத்த உறுதியாக உள்ளன.

அதனை பார்த்துத்தான் எனக்கும் நண்பன் பிரதீபனுக்கும் இந்த யோசனை வந்தது நாங்கள் இந்த பிரச்சனை-யை தீர்த்து வைத்தால் என்ன?

தினமும் மூன்று வேளை சாப்பாடு-
(மற்றவர்கள் யாரேனும் ஒரு வேளை தன்னும் சாப்பிடுகின்றார்களா என யோசிக்கிறோமா?)

பத்திரிகை படித்தல் ..
(தேவாரம் திருவாசகம் திருவி சைப்பா திருப்பல்லாண்டு திரு வெம்பா திருச்செந்தூர்புராணம் எல்லாம் எம்மவர்களின் பத்திரி கையில் பாராட்டி வாழ்த்து கின்றோம் புராணங்களுக்கு முன் தோத்தது போங்கள்)

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டா-மென்று நம் பெரியவர்கள் சொன்னார்கள். இன்று "J.P இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாமென்று "ஒரு சிறுசு சொல்லிவிட்டு ஓடுறான்

விவஸ்தை இல்லாத விளம்பரங்கள்.

"எனது மகள் ரோசி வளர்த்த நாய்க்குட்டி நேற்று மாலையிலிருந்து காணாமல் போய் விட்டது எனது மகளோ ஊன்,உறக்கமின்றி படுக்கை - யில் கிடக்கிறாள். அடுத்த மாதம் திருமணம் செய்ய மகள் வெளிநாடு போகப் போகிறாள். எனவே நல்ல உள்ளம் கொண்டவர்கள் அந்த நாய்க் குட்டியை கண்டு பிடித்து தரவும். சன்மானம் தரப்படும். விசேட அடையா-ளம் ஒன்றுமில்லை. அது ஆண் நாய். நாய் மாதிரியே இருக்கும்."

நாட்டில் செய்ய வேண்-டிய எவ்வளவோ நல்ல வேலைகள் உள்ளன.

யாராவது இதனை சிந்தித்து பார்க்கிறார்களா (அடு த்த புதுப்பட கசற் எப்போது கைக்கு வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டு இருக்கி ன்றோம்)

எனவே மற்றவர் போல நாங்களும் இருக்காமல் இந்த மாதிரி நல்ல முயற்சியை உடன் ஆரம்பிப்பதென தீர்மா னித்தோம்.

எனவே மோதலில் இருக்கும் இரு பகுதியிரையும் சமாதான முயற்சிக்கு கொண்டு வருவதென நாங்கள் உறுதி பூண்டோம்.

"அட என்ன இது இப்பதான் உங்களுக்கு நல்ல புத்தி வந்ததா? இவ்வளவு காலமும் என்ன செய்தீர்கள்? காலம் கடந்து முடிவெடுத்து விட்டீர்களே?

நோர்வே விசேட தூத -ரும் அவர் தலைமை-யிலான குழுவினரும் இறங்கிய பின்னர் தான் உங்கள் மூளைக்கு வெளிச்சம் வந்த தா?

இவர்கள் தலையிட்டு தலையிடிபட்டுக் கொண்டிரு-க்கும் விசயத்தில் எப்படி அவர்களை அப்புறப்படுத்தி, விட்டு உங்களை .. .. ... .. ..
ஐயோ கொஞ்சம் பொறுங்கள். நாங்கள் ஒன்றும் இலங்கை இனப்பிரச்சனைக்கு மத்திய ஸ்தம் செய்ய முன் வரவில்லை (எங்கட மனுசிமார் உதுக்கெல்லாம் போக விடமாட்டினம். நோர்வே அமைச்சர் உந்த விசயத்தில குடுத்து வைச்ச பிறவி)நீங்கள் கற்பனை செய்து எங்கேயோ போய் விட்டீர்கள் நாங்கள் தீர்த்து வைக்க நினைப்பது எங்கட அருமை நண்பர் சண்முகத்திற்கும் →

அவரின் அன்புமாமா பொன்னுத்துரைக்கும் சிறு சண்டையில் தொடங்கி இருபது வருஷமாக இழுபட்டுக் கொண்டிருக்கும் "உள் வீட்டுப் பிரச்சனையை தீர்த்து வைப்பதுதான் நாங்கள் எடுத்த முடிவு.

இந்த பிரச்சனையை ஈராக் ஜனாதிபதி வந்தாலும் தீர்த்து வைக்க முடியாது. இது உள் நாட்டுக்குள் உள் வீட்டு பிரச்சனை. இதை நாங்கள் தான் தீர்த்து வைக்க வேண்டும்.

எனவே இந்த (உள்வீட்டு) பிரச்சனையை நாங்கள் தீர்க்க முடிவு செய்திருப்பதை முன்னிட்டு வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களாகிய நீங்கள் பூரண ஆதரவு அளிப்பீர்களென நம்புகின்றோம்.

எமது இந்த "ஆண் - கள் முயற்சிக்கு (கன்னி செய்தால் கன்னி முயற்சி ஆண் செய்தால் ஆண் முயற்சி) பூரண நல்லாசி தருமாறு இருகரம் கூப்பி வணங்குகின்றோம். எனவே வரும் தேர்தல் நாளன்று எமது கட்சியின் சின்னமான "முட்டைக்கு (கோழி முட்டை தான் வேறு பறவைகள் போடும் முட்டையல்ல. மறந்து விடாதீர்கள்) முன் "முட்டை" போட்டு அடச்சீ! மன்னிக்கவும் புள்ளடி போட்டு.. ..

அடக் கடவுளே மக்கள் முன் எந்த விசயத்துக்கு வந்தாலும் இப்படித்தான் வந்து விடுகின்றது. எம்மை மன்னித்து விடுங்கள். நாங்கள் எந்த கட்சியுமல்ல.

சரி விடயத்துக்கு வருவோம்

எமது முயற்சிக்கு துரையரின் மருமகன் சண்முகம் ஜே.வி.பி போல உதெல்லாம் உங்களுக்கு தேவையில்லாத வேலை என்று வெடித்து தள்ளினாலும் உள்ளுக்குள் சந்தோஷப்படுவது அவர் முகத்தில் தெரிந்தது.

ஆரம்ப கட்ட நடவடிக்கையாக எதனை முதலில் தொடங்குவது? சண்முகத்திடம் விசியம் சொல்லியாகி விட்டது. இனி துரையரிடம் கதைக்க வேண்டியதுதான். நாங்கள் இப்படி பிரபல்யம் வாய்ந்த சமாதான முயற்சியால் ஈடுபடுகின்றோம் என்பது எப்படியோ... ..

"அண்டை அயல் நாடுகளுக்கெல்லாம்" இலங்கையின் "டெங்கு காய்ச்சல்" போல் பரவி விட்டது.

பல உள் நாட்டு (வீடு) தலைவர்கள் ஆதரவு தெரிவித்தார்கள்

ஆனால் துரையரின் பக்கத்து வீட்டுக்காரர் "இந்தியா" போல் அவ்வளவு சந்தோசப்படவில்லைஎனக்கில்லாத அக்கறை தூரத்தில் இருக்கும் (பதினைந்து வீடு தள்ளி) உங்களுக்கு மட்டும் ஏன் வந்தது என்ற நினைப்போ தெரியாது).

யார் என்ன சொன்னாலும், எப்படி கூப்பாடு போட்டாலும் → → →

"சமாதானத்திற்கான யுத்தம்" தொடர்ந்தது போல் நாங்க - ளும் இந்த முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட வேண்டிய துதான்.
துரையரிடம் என்ன மாதிரி கதைப்பது?
"ஐயா பழசையெல்லாம் மறந்து விடுங்கள் இனிமேல் நடக்கப் போவது நல்லவை யாக நடக்கட்டும் "
என பழைய வசனம் பேசுவதா?. அல்லது இங்கே பாருங்கள். காலம் மாறிக் கொண்டு வருகின்றது. ஒருத் தன் பெண்டாட்டி குழந்தையை இன்னொருத்தன் பெண்டாட்டி வயிற்றில் சுமக்கும் காலமிது பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர நாடுகள் என்ன மாதிரி ஓடித் திரியுது எதிர் காலத்தில் உங்கட பிள்ளை யள் சந்தோஷமாய் இருக்க வேண்டாமோ?
கோபத்தை விட்டு பேச்சு வார்த்தையை தொடங் - குங்கள்.
நானும் பிரதீபனும் யாழ்ப்பாணத்து மினி பஸ்சில் போவது போல் மூளை குலுங்க குலுங்க யோசனை செய்தோம்.
நாங்கள் இருவரும் படும் அவஸ்தையைப் பார்த்து சண்முகம் பரிதாபப்பட்டார் எங்களை கொழும்புப் பயண அனுமதி பெற நின்ற தமிழ் மக்கள் போல் பரிதாபமாகப் பார்த்தார்.
"அண்ணேய் மாமாவை பேச்சு வார்த்தைக்கு இழுத்துக் கொண்டு வந்தாலும் என்ர மச்சான் உதுக்கு சம்மதிப் பானோ தெரியாது"

நானும் பிரதீபனும் ஒருவரை யொருவர் பார்த்தோம். என்ன இது புது சிக்கல். சில வேளை பேச்சுவார்த்தை தொடங்க அவன் "சிங்கள உறுமய மாதிரி ஆர்ப்பாட்டம் போராட்டம் நடத்துவானா?
பொறுமை. பொறுமை.
எங்கள் நல்ல காலத்துக் கு துரையர் பேச்சு வார்த்தை க்கு சம்மதித்-தால் எடுத்த உடனேயே மருமகன் தோளில் கை போட மாட்டார்.
எவ்வளவு கால பிரச்சனை?
எடுத்த உடனேயே இரு பகுதியும் பகைமை மறந்து கை கோர்த்தால் .. .மரியாதை இல்லாமல் போய் விடும்
உலகம் என்ன சொல்லும்?
பல காலமாய் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நல்ல விறு விறுப்பான திரைப்படம் இருந்தாற் போல் "சப்பென" முடிந்தால்.. .. ..?
ரசிகர்களின் நிலை என்ன வாவது?
கொதித்து போக மாட்டார்களா தயாரிப்பாளர்கள்?
"அட என்னடா இது இன்னும் கன காலத்துக்கு பொழுதை போக்கி காசை சேர்க்கலாம் என்றால்.. .. "
சரி பொறுமையாக விசியத்தை கையாள்வோம். இரு பகுதியி- னரையும் ஆரம்ப கட்ட நட வடிக்கையாக நல்ல சமிக்ஞை காட்டினால் அதாவது பொரு ளாதார தடை நீக்கம், கைதிகள் பரிமாற்றம் என நோர்வே சொல்வது போல் (வாசிப்பதால் மனிதனுக்கு "ஐடியா" வருகின்றது)

துரையரும் சண்முகமும் .. .. ஏதாவது செய்யலாம் தானே இவர்களை பொறுத்தவரை கைதிகள் பரிமாற்றமோ பொருளாதார தடையோ செய்ய முடியாது.

வேறு என்ன செய்யலாம்?

"அண்ணேய் இப்படியொன்று செய்யலாமே?" உற்சாகமாகக் கேட்டான். பிரதீபன்

"என்ன ஐடியா வந்தது உடன சொல்லும்."

"இப்படி செய்தால் என்ன சண்முகம் இடம் பெயர்ந்து வன்னிக்குப் போய் திரும்பி ஊர் வாறதுக்கிடையில் துரையர் ஊர் வந்து தங்கட வீட்டு அலவாங்கு மண்வெட்டி கேற்றில் அரிதட்டு புளிப்பானை எல்லாம் எடுத்தவரெண்டு சண் முகம் சொன்ன வரெல்லே.. முதற்கட்டமாய் நல்லெண்ண நடவடிக்கையாய் சண்முகம் வீட்டில எடுத்த சாமான்களை துரையரைக் கொண்டு கொடுக்கச் செய்யலாம்.

பிரதீபன் அரசியல்வாதி போல் பொரிந்து தள்ளினான்.

"நல்ல யோசனை இது, உந்த யோசனையை செயல்பட வைக்கலாம்.. .. அடுத்தது கைதிகள் பரிமாற்றம் தான் சிக்கல்.. .. .. ஆ .. அதுக்கும் வழி இருக்கு சண்முகத்தின்ரை மனுசியை துரையரிட்டை அனுப்பிவைக்கலாம்."

(மனுசிமாரெல்லாம் புருசன்மா ரிடம் சிறை தானே)

நல்ல ஐடியா வர வர சந்தோஷம் பெருக்கெடுத்தது ஒரு பத்திரிகை, தொலைக்கா ட்சியிலிருந்தோ ஒருவர் தன்னும் பேட்டி எடுக்க வரமாட்டார்களா? மனது பெரிதும் ஏங்கியது? நாங்கள் உள்நாட்டு மனித ர்கள் தானே தென்னிந்திய எழு த்தாளர்கள் என்றால் என்ன மாதிரி விழுந்தடித்து ஓடியிருப் பார்கள் அவர்களிடம் ஆசீர்வாத மும் பெற்று இருப்பார்கள்.

நாங்கள் நினைப்பது எல்லாம் நல்லபடியாக நடந் தால்..

ஒரு சோதிடரை அணு கி நல்ல நாள் குறித்து சுபமுகூர்த்த வேளையில் துரை யரை பார்க்க புறப்பட் டோம். இது பற்றி பரம ரகசியமாக வைத்திருந்தோம்.

சண்முகத்திற்கு கூட இது பற்றி மூச்சு விடவில்லை.

ஞாயிற்றுக்கிழமை மாலை துரையரின் வீடு இருக்கும் ஒழுங்கையில் இறங் கினோம். கூட ஒரு பாதுகாப்பு உத்தி யோகத்தரும் இன்றி. ஒழுங் கையில் ஒரு சனத்தையும் காணவில்லை ஊர் நாய்கள் நன்றி மறவாமல் எங்கள் இருவரையும் வரவேற்றன.

சனங்கள் எங்கே போய் விட்டார்கள்? ஏதாவது தமிழர் போராட்டம், ஆர்ப்பாட்ட ஊர்வ -லமென்று போய் விட்டார்களா? (போராட்டங்கள் நடப்பதால் தானே நாங்கள் "என்ன நிலையில் இருந்தோம் என தெரிய வருகின்றது)

நான் குழம்ப பிரதீபன் என் குழப்பத்தை தெளிவுபடுத்தி - னான்.

"ஏன் அண்ணை மண்டை யைப் போட்டு உடைக்கிறியள் இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை. சனங்கள் வீட்டில இருந்து பொதிகையில படம் பார்க்குதுகள்"

நான் அதை மறந்து போய் விட்டேன் துரையர் வீட்டை நெருங்க தலைக்கு மேலே சட சட வென சத்தம் கேட்டது மேலே அண்ணாந்து பார்த்தால்.. ..

"என்ன சமாதானப் புறாக்க ளோ? ஐயோ அது புலுனிக் கூட்டமெல்லே பறந்து போகுது"

துரையர் வீட்டு படலையில் கால் வைக்க உள்ளிருந்து பாடலொன்று சோகமாய் கேட்டது

"கைவீசம்மா கை வீசு
கடைக்கு போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு"

பாசமலர் படத்தின் கடைசி கட்டம் நெருங்கிக் கொண்டிரு ந்தது. நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து கண் கலங்கினோம்.



கடவுளே! சமாதானப் புறாக் கள் கூட்டமாக பறந்தன.

" பிரதீபன் பார்த்தீரே நாங்கள் வந்த நேரம் சமாதானப் புறாக்களும் எல்லே பறக்குது"

நான் என்னை மறந்து சொல்ல அவன் வாயைப் பொத்தி சிரிப்பை அடக்கினான்

"தம்பி அருமையான சந்தர்ப்பம்! பாசம் பொங்கி வழியுது"

நாங்கள் வந்து நிற்பதைக் கண்டு துரையர் எழுந்தோடி வந்தார்.

"வாங்கோ வாங்கோ நான் படத்தைப்பார்த்து என்னை மறந்து போனேன். எவ்வளவு தரம் பார்த்தாலும் அலுக்காது அது சரி என்ன விசயமாய் வந்து இருக்கிறியள்?"

"ஒரு முக்கிய விசியமாகத்தான் வந்தனா - ங்கள் படம் முடியட்டும் பிறகு கதைப்பம்"

படம் முடிந்தது
துரையர் அழுதார்
துரையரின் மனுசி அழுதாள்
நான் அழுதேன்
நண்பன் அழுதான் - ஆனால்
சண்முகத்தின் மச்சான் அழவில்லை
(இது மரபுக் கவிதையா புதுக்கவிதையா)

அவன் நெஞ்சை படம் உருக்கவில்லை. பல்குழல் எறிகணை போல் தீமை செய்வதென்றே உறுதியாய் நின்றான்.

மெதுவாக விசியத்தை "சைலென்சர் பூட்டிய பிஸ்ரல்" போல் மெதுவாய் வெடித்தேன். துரையர் அ,உ என்று கத்தாமல் ஆ,ஊ என கத்தினார். (துரையர் பள்ளிக் கூடம் பக்கம் போனதில் லையென ஊரார் கதைப்பார்கள்)

நாங்கள் விடவில்லை. சண்முகத்தின் மச்சான் நான் சொன்ன விசயத்தை கேட்டு எதிர்க்கட்சி போல் கத்திக் கூப்பாடு போட்டு வெளி நடப்பு செய்தான்.

"போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்"

"தம்பி இப்படி சொன்ன வையெல்லாம் எங்கேயா போட்டினம் .. அமைதி.. அமைதி.. உங்கட பிள்ளை யள் நாளைக்கு ஒண்டுக் கொண்டு சந்தோஷமாய் எல்லே இருக்க வேணும். சண்டை வேண்டாம்."

"இருபது வருஷமாய் எந்த உறவும் இல்லாமல் இருக்கிறம். கதைக்க விரும்பி னால், தாங்களாய் வந்து எங்களோட கதைக்கிறது தானே பிறகேன் உங்கள பிடிச்சு அனுப்புவான்"

"தம்பி அவசரப் படாதேயும் உம்மட அக்கா புருஷன் எங்களை பிடிச்சு அனுப்பேல நாங்களாய்த் தான் வந்தனா ங்கள். நாங்கள் சமாதான விரும்பிகள்"

துரையரின் மகன் பாகி ஸ்தானும் சீனாவும் இந்தியா- வை சந்தேகத்துடன் பார்ப்பது போல் எங்கள் இருவரையும் கேள்விக் குறியோடு நோக்கி னான். "என்ன அப்பனும் பிள் ளையும் கனக்க யோசிக்கிறியள் இந்த விசியத்தில எங்களுக்கு ஒரு நன்மையும் இல்லை.

நீங்கள் விரும்பினால் உங்கட காணியில நான் கடைபோடுறத்துக்கு இடம் தந்தியளெண்டால் நல்லாயி ருக்கும். நீங்களும் கடை போட்டு நல்லாய் வந்திட்டியள் இப்ப எதிரியளும் கூட. உங்கட பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டு.

கடை போட்டால் நான் அங்க தானே இருப்பன் யாரேனும் வந்து வாலாட்ட முடியாது"
("நானென்ன திருகோணமலை யையா கேட்டன் அமெரிக்கா மாதிரி") நான் பிரதீபனை பார்த்து கண் சிமிட்டினேன்.
"அண்ணன் சொல்லுறது சரிதான். நானும் சும்மாதானே நிக்கிறன் கடையில உதவிக்கு வந்து நானும் நிற்பன்"

ஒரு மாதிரி அவர்களை "சதுர மேசைக்கு" (துரையர் வீட்டில் வட்ட மேசை இல்லை) கொண்டு வந்து எமது திட்டத்தை சொல்லி அவர்களை சம்மதிக்க வைத்தோம். எமது திட்டத்தின் படி அவர்கள் சமாதான முயற்சியில் ஆர்வம் உடையவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை வெளி உலகிற்கு காட்டு வதற்கு.. .. ..

இப்போதுதான் ஊரில் மின்சாரம் வந்து விட்டதே அதனால் இருவர் வீட்டு வாசல்களில் "பச்சை விளக்கு" எரிய விடுவதாக வாக்குறுதி அளித்தார்கள்.

குளுக்கோஸ்ரச முதற் கட்டம் வெற்றி. (இது நாம் எமது நடவடிக்கைக்கு சூட்டிய பெயர். எல்லாருக்கும் "இனிப்பான" விசயம் என்ற படியால் இப் பெயரை சூட்டினோம் சரிதானே) அடுத்து இரு பகுதியினரையும் பேச்சு வார்த்தை தொடங்குவதற்கு முதற் கட்டமாய் துரையர் காலையில் சண்முகம் வீட்டுப் பக்கமாய் போகும் போது சண்முகம் வாய் நிறைய துரையரை "மாமா" என்று → அழைப்பதென்றும் மறுநாள் சண்முகம் துரையர் வீட்டுப் பக்கமாய் போகும்போது பாசம் பொங்க "மருமகனே" என்று அழைப்பதென்றும் தீர்மானித்தோம்.

எமது முயற்சி வெற்றி அளித்தது இரு குடும்பமும் இப்போது ஒன்று சேர்ந்து விட்டார்கள் "என்ன பிரதீபன் பார்த்தீரே 'நான்' கஸ்ரப்பட்டு மூளையைக் கசக்கி 'நான்' ஐடியா போட்டு 'நான்' கடை போட இடம் எடுத்து பெரிய சாதனை செய்து போட்டன்"

நான் சொல்ல அவன் முறைப்புடன் என்னை பார்த் - தான்.
"என்ன சொல்லுறியள் நீங்கள் 'மட்டும்' கஸ்ரப்பட்டதோ? அப்ப 'நான்' ஐடியா கொடுக்காமல் சும்மா பின்னால வந்தனானே?"


"அட போடா நீ என்ன பெரிசாய் ஐடியா கொடுத்தனி?
"வாயை அளந்து பேசும் நானும் ஐடியா கொடுத்தனான்"
"என்ன வாய் நீளுது. கதையை நிப்பாட்டு"
"நீர் வாயை மூடும்
"நீ முதலில வாயை மூடடா"
நீ ஒரு.. .. .. .."
"நீ ஒரு.. .. .. .."
இருவரும் கட்டிப் புரண்டோம்.
"ஐயோ பொன்னுத்துரையர் சண்முகம் ஓடி வாங்கோ. ரண்டு பேரும் சண்டை பிடிக்கினம் - சண்டையை நிப்பாட்டுங்கோ"

சனங்கள் பெரிதாக கூப்பாடு போட்டார்கள்

(யாவும் சிந்தனை)

# புதிர்ப்போட்டி (1)

இப் படங்களின் பெயர்களை எழுதுங்கள் அப் பெயர்கள் ஒவ்வொன்றில் இருந்தும் ஒரு எழுத்தை தெரிவு செய்து அவற்றை சேர்ப்பதன் மூலம் ஓர் ஊரின் பெயரை கண்டு பிடித்து எழுதி எமக்கு அனுப்புங்கள்



சிறு தடயம்:- இங்கு பயிர்கள் மட்டுமல்ல பட்டமும் விளைகின்றது என்ன உங்களுக்கே அல்வாவா?

அனுப்ப வேண்டிய முகவரி:- "புதிர்ப்போட்டி"
ஆசிரியர்
அம்பலம்
305, பலாலி வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

முடிவுத்திகதி:- 20.[illegible].2002

குறிப்பு: 16 வயதிற்குட் பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.
பெறுமதியான பரிசில் காத்திருக்கின்றது.

# சிள்வண்டின் இரா

கடவுளால் ஆசீர்வதிக்கப்படாததும்
யாராலும் நேசிக்கப்படாததுமான
இரவு.
கனவைப் பிழிந்து தெருவில்
எரியும் கோரப் பற்களைக் கொண்ட
சாத்தான்களின் வருகையுடன் ஒரு
அழகிய இரா விஷமேறிக் கெட்டது.
வண்ணம் கொண்ட நட்சத்திரப்
பால் வெளியில் எம் இரவு
திசையிழந்த கனா ஆகியது.
இருப்பு-
அடித்து நொறுக்கியதும்
இடித்து உடைத்ததும்-
வீரிட்டு அலறலும் தேய்ந்து தேய்ந்து
அமாவாசைக்கு பின்னும்
தேய்ந்தது-
காற்றாடும் நட்சத்திர நிலவினில்
மல்லிகை வாசம் போய்விட
செங்குருதியின் வாசம்
முற்றம் முழுதும் வீசத் தொடங்கியது.
கேரலாய், கேவலாய்
எழுந்தது ஜீவகீதம்.
இருவிலி மூச்சை இழுத்து
அடக்கிக் கொண்டு சிள்வண்டை
எச்சரித்தது.
இரவுகளே! சிள்வண்டை பயமுறுத்தவா
வருகின்றீர்!


-கோகுலராகவன்-

# விசாரணை

புதுநிலவன்-

அவர் கண்ணில் அநுதாபம் பொங்கி வழிந்தது. தன் கண்ணாடியைச் சரி செய்து கொண்டபடி என்னை நிமிர்ந்து பார்த்தார்.

"உங்கட அவர் எப்படிக் காணாமல் போனவர்?" மிருதுவான குரலில் விசாரித்தார்.




"ஒரு நாள் எங்கட வீடு எப்படியிருக்கெண்டு பார்க்கப் போனவர் அதுக்கு பிறகு அவர் திரும்பி வரவேயில்லை!" கடைசி வார்த்தைகள் என் அழுகைக்குள் அமுங்கிப் போயின.

"சரியம்மா! அழாதையுங்கோ! நாங்கள் எப்படியும் எங்களால முடிஞ்சளவு முயற்சியெடுத்து உங்கட புருசனையும் அவரைப் போல காணாமல் போன மற்ற ஆக்களையும் கண்டு பிடிச்சுத் தருவம்"!

அவரது வார்த்தைகள் என் உள்ளத்தில் என் கணவரை மீண்டும் காணுவேன் என்ற நம்பிக்கையை ஊட்டியது. அந்த அதிகாரி கேட்ட ஆவணங்களையும் விபரங்களையும் கையளித்து விட்டு என் கணவரை எப்படியும் மீட்டுத் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் வீடு சென்றேன்.

நாட்கள் நகர்ந்து சென்றன. என் கணவர் இன்னமும் வீடு வந்து சேரவில்லை. மாறாகத் திரும்பவும் ஒரு விசாரணைக்கு அழைக்கப்பட்டேன். இம்முறை வேறொரு அதிகாரி உட்கார்ந்திருந்தார். அவர் முன் சென்று என் கணவரின் விபரங்கள் அடங்கிய "பைலை" வைத்தேன்.

"இதொண்டும் தேவையில்லையம்மா!"
"ஏனையா!? விசாரணை இனி இல்லையோ!?"
"சீச்சீ! அப்படியில்லையம்மா! காணாமல் போன ஆராவது திரும்பி வந்திருக்கினமோ? நாங்கள் ஏதோ செய்ய வேணுமெண்டதுக் - காண்டித்தான் விசாரணை செய்யிறம்"
"என்னய்யா இப்பிடிச் சொல்லிறியள்? முந்தியிருந்த ஐயா என்ர அவரைக் கட்டாயம் கண்டு பிடிச்சுத் தாறனெண்டு சொன்னவர் "நீங்களென்னண்டால்... .."
"நாங்கள் உங்களைக் கூப்பிட்ட விசயமே முந்தி உங்களை விசாரிக்க வந்த ஐயாவைப் பற்றித்தான்! "
"அந்த ஐயாவைப் பற்றியோ?
"ஓமோம்! அவரைப் போன கிழமையிலிருந்து காணேலை. அதுதான் அவரைப் பற்றி உங்களுக்கேதும் தெரிஞ்சால் விசாரிப்ப - மெண்டுதான். .. ..?"
அவர் கூறி முடிக்குமுன்னே நான் மயங்கிப்போயிருந்தேன்

(யாவும் கற்பனை)

அறையில் ஆடியது, அரங்கேற்றம் ஆகிய பகுதிகள் புதிய எழுத்தாளர்களுக்கானது. அறையில் ஆடிய உங்கள் கால்கள் இனி அம்பலத்தில் அரங்கேறட்டும். இலக்கியத்திறனை உங்களுக்குள்ளேயே பூட்டி வைத்திருக்கும் எழுத்தாளர்களே! தாமதிக்காமல் இப்பகுதிக்கு உங்கள் பெயர், முகவரியோடு ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். ஒருவரது ஆக்கம் இப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முறை மட்டுமே பிரசுரமாகும்.

இனியென்ன ?

உங்கள் முன் உள்ள பெருங்கல்லை
சிலையாக்க சிந்தியுங்கள்
"சாணை பிடித்தது போதும்
வாளை எடுங்கள்"

# அரங்கேற்றம்

## சமாதானம் சொல்லுங்கோ

சீற்றில் இருந்து இறங்காம லேயே "கிளினர்" கொடுத்த ரீயை சுவாரஸ்யமாக உறிஞ் சிக் கொண்டே ஆலயச்சூழலை அவதானித்துக் கொண்டிருந் தான் பண்டார. நேற்று முழுவதும் உறக்கமின்றி இந்த பஸ்ஸை செலுத்திய அலுப்பும் இடையிடையே உழைவு கொடு த்துக் கொண்டிருந்தது.

பஸ்ஸில் வந்த மாணவ ர்கள் அனைவரும் கோயிலைப் பார்க்க சென்று விட்டனர். "ஓமந்தையும்" அவர்களோடு தான் சென்றுவிட்டான் போலும். அவனைக் காணவில்லை. சுற்றிப் பார்த்தான்.

அப்பொழுதுதான் அவள் அவன் கண்ணுக்குப் பட்டாள். வெள்ளை நிறச் சேலையுடன் நெற்றியில்"பளிச்" என்று திருநீறு அணிந்திருந் தாள். கைகளிலும் அதேகுறி. தீட்சை கேட்டவள் என்பதை சொல்லிக் கொண்டி ருந்தது.

பண்டாரவிற்கு கடவுள் நம்பிக்கை இல்லை. சிறு வயதில் பெற்றோரை ஒரு விபத்தில் இழந்து விட்டு இந்த பஸ் முதலாளி வீட்டிலேயே வளர்ந்து வந்தவன். அதனா - லோ என்னவோ நாஸ்தி கக் கொள்கை அவனிடம் செல்வாக்குப் பெற்று விட்டது.

அவளையே கூர்ந்து அவதா னித்தான் பண்டார. அவள் ஏதோ பெரும் கவலையில் மூழ்கியிருந்தாள் என்பதை அவள் இருப்பு சொல்லியது. அந்தக் கட்டில் அவள் நீண்ட நேரமாக இருக்க வேண்டும். கைளை நாடிக்கு கொடுத்த-படி அங்கு நடப்பவற்றை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பிள்ளைகள் அங்குமிங்கும் ஓடித்திரிந்த தும் ஆளுக்கு ஆள் பொட்டு வைத்துவிடுவதும் அவளுக்கு ஏதோ சந்தோசத்தைக் கொடு த்திருக்க வேண்டும்.

விரிந்த விழிகளோடு புன்னகைத்தாள்.

ஆம். அது புன்னகை தான். பண்டாரவுக்கு ஏனோ மோனலிசாவின் ஞாபகம் வந்தது.

அவள் சிரித்தாளா.. ..

அல்லது அதுவும் கவலைதா னா?

அவள் அந்தரித்து கையை அங்கலாய்த்தாள். முகத்தில் ஏதோ ஏக்கம்.. பயம்.

"ஓமந்த"

கிளினரைத்தான் அழைத் தான்.

ஸ்ரீ.லக்ஷமணன்



கடலையை கொறித்தபடி அவன் வந்து கொண்டிருந்தான். ஓமந்தை - அவன் ஓமந்தையில் பிறந்து வளர்ந்தவன். அதனால் “காரணப்பெயர்” அவனுடன் ஒட்டிக் கொண்டது. பெரும்பா ன்மை இனத்தவன் தான். இனப்பிரச்சினை தொடங்கி விட கொழும்போடு சென்று விட்டது அவன் குடும்பம். நன்றாக தமிழ் பேசுவான். இதனால் அவனை நம்பியே சுற்றுலாக் குழுவும் புற -ப்பட்டிருந்தது.

அவர்கள் களனி பல்கலை மாணவர்கள். தங்கள் கல்வி யோடு சம்பந்தமான பல விடயங்களை இந்த ஆலயத்தி -ல் தேடிக் கொண்டிருந்தனர்.

அர்ச்சனைச் சிட்டை எடுக் கவும், வலம் வந்து கும்பிட - வும் சிலர் போய்க் கொண்டிரு ந்தனர்.

ஆலயத்தில் புகைப்படம் எடுப்பது தடை செய்யப்பட்டி ருந்தது. இருந்தாலும் இவர்க ளுக்கு சிறு சலுகை தரத்தான் செய்தனர் ஆலயத்தின் நிர்வா கிகள்.

அவர்களது முகங்களில் ஏதோ பெருமை தெரிந்தது. இலங்கையின் இரண்டு பிரதமர்கள் வருகை தந்த ஆலயமல்லவா அது.

அதன் நிர்வாகிகள் தாங்கள் என்ற பெருமையாக்கும்.

எங்கட நாட்டின் இப்போதைய நாயகன் வரேக்க இந்த ஊரே ஒருக்கா பெருமைப்பட்டுக் கொண்டது.

"அவர் தன்ரை கையாலேயே தன்ரை சேட்டைக்கழற்றி..! வீபூதி பூசி.. .. .. !
பொட்டு வைச்சு.. .. .. !
அப்பப்பா வலு சாதாரணமான மனுசன்!" ஊர்ப் பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள்.
அவர் வந்தபோது உதட்டுக்கு சாயம் பூசி கோயிலுக்குள்ள நிண்ட சில உயர் குடிப் பெண்கள் பேசியது கோயில் சுற்றுப்புறத்தில் இப்போதும் எதிரொலிக்கிறது.

"அவற்றை மிஸ்ஸிஸ் வரவில்லையோ".. .. ஒருத்தி

"வரக் கூடாதாக்கும்".. .. .. மற்றவள்..

"எண்டாலும் ஒருக்கா வந்திருக்கலாம்".. ..

மாணவர்கள் தங்கள் விருப்பப்படி படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். வந்தவர்களில் சிலர் சோடிகளாகவுமிருந்தனர். அவர்கள் ஆலயத்தின் முன்றலில் கடலை கொறிப்பதும் படம் பிடிப்பதுமாய் ஓடித் திரிந்தனர்.

அவர்களைப் பார்க்க ஒரு கூட்டமே கூடியிருந்தது.
அவர்களைப் பார்த்து தமக்குள் ஏதோ பேசி சிரித்துக் கொண்டிருந்தனர் உள்ளூர் இளைஞர்கள்.

ஓமந்தை அவர்களை ஒரு மாதிரிப் பார்த்தான். அவனுக்கு புரியவில்லை. ஒரு தலை நரைத்த பெரியவர் அவன் பார்வையை விளங்கிக் கொண்டார் போலும்.

"அவங்கள் சோதினை எடுத்துப் போட்டு நிக்கிறாங்கள் வேற பொழுது போக்குகளும் இல்லைத் தானே.. .."

ஓமந்தை ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. அதனால் இதுபற்றி தனக்கு விளங்காது என்று நினைத்துக் கொண்டான். பஸ்ஸில் ஏறி ஒரு சீற்றில் சாய்ந்தான்.

ஒரு சிங்கள சினிமாப்பாடல் பஸ்ஸினுள் பரவியிருந்தது.
வெளியில் ஏதோ கூச்சல் கேட்டது.

யாரோ உறுக்கும் சத்தம் அதைவிட மேலாய் இருந்தது. நிமிர்ந்து பார்த்தான் ஓமந்தை. ஸ்ரெயரிங்கில் படுத்திருந்த பண்டாரவும் இறங்கினான்.

அங்கே அந்த வெள்ளைச் சேலை அம்மா அந்த மாணவர்களிடம் ஏதோ சொல்ல முற்பட்டுக் கொண்டிருந்தாள். ஊரவர்கள் அவளை பேசிக் கலைக்க முற்பட்டனர்.

"என்ன பிரச்சனை"? ஓமந்தையைக் கேட்டான் பண்டார.

தமிழ் தெரியாத அம் மாணவர்கள் அடையாள அட்டை இல்லாத தமிழன் மாதிரி முழுசிக் கொண்டிருந் தனர்.

பண்டார அவர்களை சமாதானப்படுத்தினான்.

ஒரு பெரியவர் கூட்ட -த்துக்கு வெளியே கூட்டி வந்தார். வியர்த்துப் போயிருந் -த அவன் உடம்புக்கு காத்து -ப்பட நல்லாயிருந்தது.

"இவட மகனை கொழும் -பில ஆமி பிடிச்சிட்டுது.. .. .. . அதில இருந்து ஒரு மாதிரி -த்தான்"

"நீங்கள் குறை நினை க்க கூடாது"

அவளது செய்கைக்காக தேசத்தின் சார்பில் மன்னிப்புக் கேட்டார் ஒருவர்.

அவருடைய கோலமும் செய்கையும் அவர் இவ்வூரின் பெரும் புள்ளியாக இருக்க வேண்டும் என்ற நினைப்பை ஓமந்தைக்கு ஏற்படுத்தின.

அந்த அம்மாவை சில பெண்கள் அவ்விடத்தை விட்டு அகற்ற நினைத்து கைத் தாங்கலாக இழுத்துக் கொண்டு போயினர். அவள் ஏதோ உரத்துச் சொல்லி அழுது கொண்டிருந்தாள்.
யாருக்கோ நிகழப்போகும் சாவைத் தடுக்க போராடுபவ னாகப் பட்டது பண்டாரவுக்கு.

"அவள் என்ன சொல்கி றாள்".. .. .. .. .. ஓமந்தையைக் கேட்டான்.

அப்பொழுதுதான் அவள் சொல்வதைக் கேட்க வேண் -டும் என்று நினைப்பு வந்த வனாய் காதுகளை கூர்மை யாக்கினான். அந்த மக்கள் கூட்டத்தின் அலட்டல்களுக் குள் அவள் குரல் தெளிவா -ய்க் கேட்டது.

"கோயிலுக்கு முன்னுக்கு நிண்டு படமெடுத்தா ஆமி பிடிச்சிடுவான்"

"இளம் பிள்ளையள்.. .. அநியாயமா.."

ஓமந்தையின் கண்கள் பனித்தன. அவன் மனம் கனத்தது. வயிற்றில் ஏதோ செய்தது.

பண்டாரவை பார்த்தான்.

அவன் ஒன்றும் புரியாமல் ஓமந்தையை அதிசயமாய் பார்த்துக் கொண்டு நின்றான்.

ஓமந்தை அடைத்த குரலில் அழுகை கலந்து பேசினான்.

"அவவின்ர மகன் விகா ரைக்கு முன்னுக்கு நிண்டு படமெடுத்ததுக்காக ஆமி பிடிச்சிட்டுதாம்.

இப்பவும் களுத்துறை சிறை -யில இருக்கிறாராம்"

சுற்றியிருந்த மாணவர் கள் ஒருவரையொருவர் பார்த் தனர். அவர்கள் முகங்க ளை கவலை தொற்றியிருந்தது. தம க்குள்ளேயே ஏதோ ஓரிரு சொ -ற்களில் பேசிக் கொண்டனர்.

சீற்றில் போய் பெரு மூச்சோடு உட்கார்ந்தான் பண்டார. "சமாதானம்" ஒரு இலையோடு புறா பறந்து வருவதாய் மேலே படம் ஒட்டியிருந்தது.

அந்தப் படத்தை வெறித்-துப் பார்த்தபடியே சிந்தனை-யில் இருந்தான்.

"டிங்"மணி ஒலி அவனை சுதாகரிக்கச் செய்தது.

திரும்பிப் பார்த்தான் பஸ்ஸில் எல்லோரும் ஏறியிருந்தார்கள்.

ஓமந்தை கலங்கிய கண்களு-டன் நின்று கொண்டிருந்தான்.

வெளியில் ஏக கூட்டம் இவர்களை வழியனுப்ப கூடியிருந்தது. பண்டார பாட்டை நிறுத்தி விட்டான்.

அது எல்லோருக்கும் திருப்தியாய் இருந்தது.பெருமூச்சுகள் அதிகமாய் பஸ்ஸை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தன.

கூடியிருந்த மக்களின் கைகள் உயர்ந்து அசைந்தன. பண்டார தன் காலை எடுத் -தான். பஸ் ஊரத் தொடங் கியது.

தூரத்தில் எங்கோ ஒரு பாடல்.. காதுகளுக்கு உயிரூட்டினான். அது புரட்சிப் பாடல்.

"பாரில் தமிழன்.. படும் வேதனைகள்.." தொடர்ந்தது.

ஒரு கணம் மனது அடித்துக் கொண்டது.

கூடி நின்ற மக்களுக் கிடையில் அந்த அம்மாவைத் தேடினான். அதோ..தூரத்தில் அவள் விம்மிக் கொண்டிரு - ந்தாள்.

"அவவுக்கு சமாதானம் சொல்லுங்கோ" ஓமந்தை.

(யாவும் கற்பனை)

-நந்தகுமார்-

## சீர் பெறட்டும் இந்நாடு

கத்தும் கடல் சூழ்ந்த தேசமிதில் - நாளும்
யுத்தக் குழந்தைகளின் ஓலங்கள்
முத்தாக இருந்த எம் தேசம் - இன்று
ரத்த ஆறோடும் ரணபூமியானதோ?
நித்தம் நித்தம் யுத்தம் செய்து - தம்
சொத்து சுகமிழந்து செத்துமடிந்தவர்கள்தான் எத்தனை?
புத்தர் போதித்த ஞானமெல்லாம்
இங்கு நித்தியக் கொலைகள் தானோ?
சத்தியமாய் இனியும் வேண்டாம் - நாளும்
செத்துமடியும் இவ்வாழ்வு
இத் தருணமதில் இனிதாய் வாய்த்திருக்கும்
மத்தியஸ்தம் அதை மகிழ்வோடு ஏற்று
உத்தமராய் எம் இன உரிமைகளை பகிர்ந்து கொண்டு
சித்தமுடன் வாழ்வோம்! சீர் பெறட்டும் இந்நாடு!

# என்னூர்.. ..

யுத்தச் சுவடுகளை தாங்கியபடி
தவிக்கிறது என்னூர்
யுத்தக் கரங்களுக்குள்
செத்துப் போன மனிதவுடல்கள்
இத்துப் போய் விட்டது – ஆனால்
இன்னமும் இரத்தக் கறைகள்
இருந்த இடத்தில் இருந்தபடியே.. .. ..

உயர வளர்ந்த ஒற்றைப் பனைகளெல்லாம்
ஒய்யாரமாய் சாய்ந்தபடி இளைப்பாற
விண்ணைப் பார்த்து வீரம் பேசிய
தென்னை மரங்களெல்லாம் - தம்
தலைகளையெங்கோ தொலைத்து விட்டு
முண்டங்களாய்.. ..

குயில்களின் பூபாளத்தில்
குதூகலித்து நின்ற
மாந்தோப்புக்களெல்லாம்
முகாரியைக் கேட்டதாலோ என்னமோ
மரணப் படுக்கையில்.. ..
பச்சையுடையணிந்து
பசுமை பூத்த வயல்வெளிகளெல்லாம்
துயிலுரியப்பட்டு துயரச்சுமைகளுடன்
கொத்திப் பதனிட்டு
கத்தரிச் செடி நட்ட நிலமெல்லாம்
கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டு.. ..
உழைப்பினைப் பிழிந்தெடுத்து
வியர்வைத் துளிகளால் எழுதப்பட்ட
வீடுகள் யாவும்
வெற்று மதில்களாய்.. ..
முற்றம் தோறும் சுற்றி நின்ற
முல்லைக் கொடிகளின்
முழு அரவணைப்பில் அவையும்
மறைந்து போய்.. ..
சவரம் செய்யப்படாத
பிச்சைக்காரன் முகத்தைப் போல்
பச்சை குத்தியபடி பற்றைகள் மட்டும்
தாராளமாய்.. ..
வீடுகள் தோறும் வெட்டப்பட்ட
பதுங்குழிகளெல்லாம்
சவக்கிடங்குகளாகிப் போனதால்
மொத்தத்தில் என்னூரே
சுடுகாடாய்.. .. ..




# அடையாள அட்டை

## அறையில் ஆடியது...

நானாய் என் உயிராய்
இத்தனை நாளும்
என்னோடு ஒன்றிப் போய்
வாழ்ந்த "அது"
நேற்றைய பொழுதில்
பிரிந்து விட்ட பிறகு
இன்னும் தூங்க பிடிக்கவில்லை.

நடு இரவு
இந்த ஊரே
உறங்கி விட்ட பிறகு
இன்னும் விழித்துக் கொண்டிருந்தன.
என் இரு விழிகள்.
காமத்துப் பூனைகளின்
விரகதாப உச்சரிப்புகள்.
இடையிடையே
உச்சத்தில் இருந்து
நச்சரித்துக் கொண்டிருக்கும்.
சாத்திரப் பல்லிகள்
என் சிந்தனையைக் சுரண்டிக் கொண்டிருந்தன.



தூரத்தில்
எங்கோ
குருவிக் கூட்டுக்குள்
பாம்பு புகுந்திருக்க வேண்டும்.
ஈனச் சத்தம்
என் நெஞ்சை இறுக்கிப்
பிழிந்தது.

ஆள் காட்டிக் குருவிகள்
இரண்டு
ஆளுக்கொரு திசைகளில்
பறந்து
மாறி மாறி கத்த தொடங்கியிருந்தன.
என்னுடைய
அப்போதைய நேரத்தை மௌனம்
முழுமையாய்த் தின்றிருந்தது.

திடீரென்று
நாய் வீட்டைச் சுற்றி
ஓடியபடியே
குரைக்க தொடங்கியது.

வியர்வைச் சுரப்பிகள்
குருதியை
வெளியேற்றுமளவிற்கு
என் இதயம்
வேகமாக அடிக்க தொடங்கியது.
அது என்ன சத்தம்
வேலிக்கதியாலை யாரோ
முறித்துக் கொண்டு
உள்ளே வந்திருக்க வேண்டும்.
.. .. .. !!!.. ..??..!!

இவன்
*கபிலன்*

*அம்பலம்*

**இன்னும் பலம் பெற .. .. .. ..**
**நீங்கள் சந்தாதாரர் ஆகுங்கள்!**

ஒரு வருடச் சந்தா - ரூபா 180.00
ஆறு மாதச் சந்தா - ரூபா 90.00
(தபால் செலவு உட்பட)

***சந்தாவினை காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ பணமாகவோ அனுப்பி வைக்கலாம். அதன்பின் மாதந்தோறும் அம்பலம் உங்கள் வீடு தேடி வரும்.***

# மின்னலில் தெரிந்தவை

## நெற்றிக்கண் திறப்பினும்.. .. .. .. .. ..

"வெள்ளைச் சீருடையுடன் பாடசாலை மாணவிகள் அழகிய பெரிய கட்டடம் ஒன்றின் முன் திரண்டிருந்தார்கள். மிகவும் ஆடம்பரமாக கட்டப்பட்டிருந்த மாடிக் கட்டடம் அது. சொக்லேட் கலர் அடித்து கறுப்பு லைனிங் கொடுத்து பார்ப்பதற்கு கண்ணைப் பறித்து விடும் போல இருந்தது. அப்போது கூடியிருந்தவர்கள் முன்னே இருவர் பிரசன்னமாகிறார்கள். நன்றாக கொசுவம் வைத்து சேலை கட்டி, கொண்டையும் போட்டபடி கைகளை வீசி அழகுராணி நடை நடந்து வந்தார்கள். அப்போது கூட்டத்தில் அமைதி. வந்தவர்கள் ஏதோ பேசுகிறார்கள். திட்டுகிறார்கள். கைகளையும் கரத்தையும் லேசாக அசைக்கிறார்கள். ஆலயத்தில் கும்பாபிஷேகம் செய்யும் ஐயரைப்போல உதடுகள் வேகமாக உரசி ஆடிக் கொண்டன. மீண்டும் மெதுவாக எதிர் வழியே சென்றுவிட கூட்டத்தில் சலசலப்பு. கவிண்டிருந்த தலைகளை உயர்த்தி மாணவிகள் ஏதோ பேசுகிறார்கள். கதைக்கிறார்கள். கோபப் பெருமூச்செறிகிறார்கள். சிடுசிடுப்பை கொப்பளிக்கிறார்கள். திடீரென மௌனம். "கட் கட் கட்.. .."

இது ரஜனிகாந்தின் (சுப்பர் ஸ்டாரின்) அடுத்த படமான "பாபா" விற்காக சென்னை ராயபுரம் காளிகாம்பாள் கோயில் முன்பாக எடுக்கப்பட்ட கிளைமாக்ஸ் காட்சி அல்ல. எமது நகரின் மத்தியில் உள்ள பிரபலமான தேசியதரம் கொண்ட பெண்கள் பாடசாலை ஒன்றில் நிகழ்ந்த உண்மைச் சம்பவம்.

அன்று காலை 10 மணி. மைதான ஓரமாக ஏராளமான மாணவிகள் குழுமி நிற்பதைக் காண நேர்ந்தது. இன்று இவ்வளவு நேரமாக பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்கிறதே. வர வர யாழ். மக்களுக்கு கடவுள் நம்பிக்கையும் ஜீவ காருண்யமும் அதிகரித்துதான் செல்கிறது என்று நினைத்து மகிழ்ந்தவனாக சென்றேன்.

ஒரு வேளை A9 பாதை திறக்கப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கிறார்களோ? சமாதானத்தை விரைவுபடுத்தக் கோரி சூரிய பகவானை வழிபடுகின்றார்களோ?

மாலை 2 மணியவில் என் மதிய இடைவேளைக்கு திரும்பி வரும் போதும் அந்த பிரார்த்தனை எதுவித சோர்வுமின்றி நடைபெற்றுக் கொண்டிருந்தது. என் எண்ணத்தின் உண்மையை அறிய எண்ணி அங்கு நின்ற காவலாளியைக் கேட்டேன். அவர் தன் உதடுகளை பிதுக்கி சிரித்தார்.

பாடசாலை விடும் வரையில் காத்து நின்று வெளியே வந்து கொண்டிருந்த மாணவிகளைக் கேட்டேன். தங்கள் பஸ்களை தேடிப்பிடிக்கும் அந்தரமான நிலையிலும் என் கேள்விகளுக்குஅவர்கள் உடன் பதில் தந்தார்கள். வெளிப்படை - யாகவே. அவர்கள் மனவெக்கை வெளியேறியது. ஆத்திரமும் கோபமும் அவர்கள் கண்களில் தெரிந்தது.

என்ன செய்வார்கள்? எதையும் எதிர்த்துக் கேட்க துணிவில்லாமல் வளர்க்கப்பட்டு விட்டார்களே. தங்களுக் குள்ளேயே பொருமிக் கொண்டார்கள்.

"முன்பொரு காலத்தில் மாணவர் அமைப்பு பிரதேச ரீதியில் பொதுமைப் படுத்தப் பட்டிருந்தபோது இத்தகைய நிகழ்வுகள் நடந்ததில்லை. இப்படி அம்பலத்தில் மாணவருக்கு எதிராக அநியாயங்களைச் செய்ய யாரும் துணிந்ததில்லை. ஆனால் அண்மைக்காலமாக அவர்கள் இப்படிப் பழக்கப்பட்டுப் போனார்கள்." என்றார் கவலையோடு ஒரு பெற்றார்.

ஒரு சனிக்கிழமை பரிசளிப்பு விழா மிகவும் கோலாகலமாக அதிக செலவில் நடைபெற்றது. ஆசிரியர்கள், மாணவிகள் எல்லோரும் தத்ததமக்கே உரிய பாணியில் ஆடம்பரமாகவே வந்திருந்தனர். பிரதமவிருந்தினர் முதலாய் எல்லோரும் கல்லூரியின் கல்வித்தரத்தையும் நிர்வாக செயற்றிறனையும் மெச்சிப் பேசினார்கள். சிலர் தாங்கள் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைகளை பெருங் குரலெடுத்து கூறினார்கள். சபையினில் கைதட்டல்கள் அவ்வளவு அதிகமாய் இல்லைத்தான்.

திங்கட்கிழமை பள்ளி சென்ற மாணவிகளுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது

"முந்தநாள் வராதவர்கள் வெளியிலபோங்கோ.. ..

"டொனேசன் கட்டி அற்மிசன் எடுக்க மட்டும் லைன்ல கெஞ்சிக் கொண்டு வந்திருவினம்.. .. ஒரு பங்சன் என்டா வரேலாது ".. ..

ஆசிரியை ஒருத்தி தன் ஆங்கிலத்திறமையை அரங் கேற்றினாள்.

"நாளைக்கு அப்பா அம்மா வரவேணும்.." கண்டிப்பான உத்தரவு.

காலில் இருந்த பெரிய புண் நோகவே அந்த தேமா மரத்து வேரில் உட்கார்ந்தாள் ஒரு மாணவி. "என்ன இருக்கிறாய் எழும்பி வெய்யிலில் நில்" இழுத்துக் கொண்டு போய் விட்டது ஒரு அதிகாரம்.

ஏறத்தாள 400 மாணவிகள் 13 தொடக்கம் 18-19 வயதுக்குட்டபட்ட சிறுவர்கள் 8 மணி தொடக்கம் 2.45 வரையில் சுமார் 6.45 மணித்தியாலங்கள் கொளுத்தும் வெயிலில் இரக்கமின்றி.. .. ..

பட்டப்பகலில் வெட்ட வெளியில் இப்படி ஒரு அநியாயம் அரங்கேறியிருக்கிறது.

இது அப்பட்டமான சிறுவர் உரிமை மீறல் துன்புறுத்தல்.

எமது பெற்றோர் மாணவிகள், நலன்விரும்பிகள் யாராவது முறைப்படும் பட்சத்தில் உரிய சாட்சிகளின்படி, நீதிமன்றத்தில் தண்டனைக்குரிய குற்றவாளியாக கருதப்பட்டு நிர்வாகிகள் சிறை வாசமோ பணி நீக்கமோ செய்யப்படலாம்.

ஒரு சில கற்ற சுயநலம் கருதாத பெற்றோர் இப்படித்தான் வாதாடினார்கள். அனேகர் மௌனமாய் ஆமோதித்தனர். சிலர் தாமே பயந்து நின்றனர்.

இந்நிலையில் நாம் யாழ்ப்பாண கல்விச் சமூகம் பற்றி சிந்திக்க வேண்டும். நிர்வாகிகள் எதேச்சையாக முடிவெடுத்து மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை அரங்கேற்றுவதை அனுமதிக்க முடியாது.

பெற்றோர் இவ்விடயத்தில் விழிப்பாய் இருக்க வேண்டும். கல்வித்திணைக்களம் அதிபர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம் என்பவற்றுக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். அது அவர்கள் சமூகத்திற்கு செய்யும் கடமை.

மாணவர்கள் தாம் கற்கும் பாடசாலையில் விசுவாசம் வைத்தலும் அதன் மதிப்புக்கும் மாண்புக்கும் அயராது உழைத்தலுமே சிறந்த பண்பு. நமது சோம்பல் மற்றும் சிறிய தேவைகளுக்காக பாடசாலை நிகழ்வுகளை புறக்கணிப்பது மனோவியல் ரீதியில் அவர்களை ஓர் நற்பிரஜையாக உருவாக்காது என்பது உலகம் கண்ட உண்மை.

எனினும் அவர்களை பலாத்காரமாக அந்நிகழ்வுகளில் பங்கு பற்ற வைப்பது பாடசாலை மீது காழ்ப்புணர்ச்சி வளரவே வழிவகுக்கும்.

இந்நிலையில் பழைய காலங்கள் போல மாணவர்கள் பாடசாலையில் பற்றுக் கொள்ள எத்தகைய வழிமுறைகள் தேவையென பொறுப்பாளர்கள் அனைவரும் சிந்தித்தல் அவசியம். ஏனெனில் அவர்கள் உளவியல் பாடத்தை தொழிலுக்காக கற்று சித்தியடைந்த ஆசிரியர்கள். மாணவர்களுக்குரிய தண்டனைகள் மட்டும் பழைய காலம் போல இருத்தல் இயலாது.

சட்டத்திற்குட்பட்டு மாணவர் நலன் கருத்தில் கொள்ளப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

உடலியல் , உளவியல் அம்சங்கள் தண்டனைகளின் போது கருத்தில் கொள்ளப்படுதல் அவசியம்.

தாம்யார்? தமது கடமை என்ன? சிந்திப்பார்களா?

தாம் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கும் தொழிலுக்கும் தமது செயற்பாடுகள் ஏற்புடையனவாகத்தான் இருக்கின்றனவா? யோசிப்பார்களா?

இனியாவது சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகிகள் சிந்திப்பார்களா? திருந்து வார்களா?

# தப்புத்தாளங்கள்

இப்போது எல்லாப் பாடசாலைகளிலும் தமிழ்த்தின "சீசன்". ஏகப்பட்ட ஆயத்தங்கள், ஏற்பாடுகள், எதிர்பார்ப்புக்களோடு ஒவ்வொரு பாடசாலைகளும் தமிழ்மொழித்திறன், கலைத்திறன், போட்டிகளுக்கான நிகழ்ச்சிகளோடு களத்தில் குதித்துள்ளன. என்றாலும் என்ன பிரயோசனம்.? மீண்டும் பழையபடி வேதாளம் முருங்கை மரம் ஏறிட வெறுங்கையோடு திரும்புவதைத்தவிர வேறுவழியில்லை. ஆம்! சுயநலம், பக்கச்சார்பு, பாடசாலை விசுவாசம் என்பனவற்றை தங்களுக்குள்ளே கொண்டுள்ள சில அதிகாரிகள், நடுவர்கள் போன்றோரின் பொறுப்பற்ற செயல்களால் திறமையான பல மாணவர்கள் தம்முடைய திறமையின் இலக்கினை எய்த முடியாமலிருக்கின்றது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் குறிப்பிட்ட தமிழ்த்தினப் போட்டி எந்தப் பாடசாலையில் இடம்பெறுகின்றதோ அந்தப் பாடசாலையே முதன்மை ஸ்தானங்களைப் பெறுவதென்பது ஒரு எழுதப்படாத விதியாகவே யாழ்ப்பாணத்தில் இருந்து வருகிறது. அவ்விதி இவ்வருடமும் மிக அக்கறையோடு பின்பற்றப்படுவதுதான் வேதனையைத் தருகின்றது.

இவ்வாறு ஒரு நிகழ்ச்சியில் நடுவர்களின் பொறுப்பற்ற தீர்ப்பினை ஏற்றுக் கொள்ள முடியாத மாணவர் கூட்டமொன்று ஆர்ப்பாட்டத்தில் கூட ஈடுபடுமளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது. இப்படி பல மாணவர்களின் உளத்திறனைப் பாதிக்கும் வகையில் போட்டிகளில் பொறுப்பற்ற வகையில் பாரபட்சமான தீர்ப்பை வழங்குவதை இனியாவது அதிகாரிகளும் நடுவர்களும் நிறுத்துவார்களா?

இதுவும் ஒருதமிழ்த்தின போட்டி சம்பந்தமான சம்பவம்தான்

உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள ஒரு இந்துக்கல்லூரி ஒன்று தமிழ்த்தினப் போட்டிக்கான நிகழ்ச்சி ஒன்றைத் தயார் செய்தது. ஆனால் போட்டி நடைபெறும் நாள் பற்றி சுற்றுநிருபம் அனுப்பிய கோட்ட அதிகாரி, பின்னர் சில காரணங்களுக்காக போட்டித்திகதியை சிலநாட்கள் முன்னதாக மாற்றினார். இத்தகவலை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு வாய்மொழி மூலமாக அறிவிக்கவும் செய்தார். எனினும் பாடசாலைமீது 'தீராப்பற்றுக்' கொண்ட அந்த அதிபர் தன்னுடைய தனிப்பட்ட அலுவலுக்காக கொழும்பு செல்லும் அவசரத்தில் இதனைச் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பானவர்களிடம் கூறத் தவறி விட்டார். பிறகென்ன? மாணவர்கள் போதிய ஆயத்தங்கள் செய்யுமுன்னரே நிகழ்ச்சிக்கான போட்டி முடிவடைந்ததால் இறுதியில் அவர்கள் பங்கேற்கவில்லை. சம்பந்தப்பட்ட அதிபர் இனியாவது கொஞ்சம் விழித்து பாடசாலை மீது அக்கறை காட்டுவாரா?..?..?

-ஆதங்கன்-

# பலதும் பத்தும்

## அறிவுக்கு ஒரு பாடல்

1. *"அடிச்சா சிக்சரு.. அடிச்சா செஞ்சரி..*
   *லெப்டு காண்டு பாந்ர தொட்டா.. ."*
   கிறிக்கெட்டு விளையாட பயன்படுத்தும் கிறிக்கெட் மட்டை (Bat)
   செய்யப்பயன்படும் மரம் எது தெரியுமா?

2. *"தில்ரூபா தில்ரூபா காதல் நிலவே தில்ரூபா*
   *இரண்டு கண்ணால் என்னை ஆதரி.. .."*
   தில்ரூபா என்பது என்ன தெரியுமா?

3. *"சிறகே இல்லாத பூ ங்குருவி ஒன்று*
   *வானத்தில் பறக்கிறது"*
   இறக்கை இல்லாத பறவை எது தெரியுமா?

4. *"மானுத் தோலுமுண்டு மஞ்சக் கடம்புமுண்டு"*
   உலகில் அதிக தடிப்புள்ள தோலுள்ள பிராணி எது?

5. *"என் இதயத்தை திருடிவிட்டாய் அதைதிருப்பிக் கொடு"*
   இதய மாற்றுச் சிகிச்சையில் வெற்றி கண்டவர்?

6. *"பபிலோனா திராட்சைப் பழம்போல் இரண்டு கண்ணா? "*
   பபிலோன் தொங்கு பூந்தோட்டம் கட்டிய மன்னன் யார்?

7. *"இவள் கன்னியல்ல ஒரு கணனி என்று பில்கேற்றைப் போல நேசி"*
   கணணியைக் கண்டு பிடித்தவர் யார்?

8. *"ஏஞ்சல் வந்தாளே வந்தாளே*
   *என் நெஞ்சோடு"*
   ஏஞ்சல் நீர் வீழ்ச்சி எந் நாட்டில் உள்ளது?

9. "மௌனமௌனா கும்பமேளா நடத்தலாமோ காதல் மௌனா? "
கும்பமேளா என்பது என்ன?

10. "ஆதாமும் ஏவாளும் ஆரம்பிச்ச காதலிது குமுக்குதான் அம்மாடி"

உங்கள் முன்னிலையில் ஆண்களும் பெண்களுமாக 40 பேரை நிறுத்தி விட்டு அதில் ஆதாமையும் ஏவாளையும் கண்டு பிடிக்க சொன்னால் உங்களால் கண்டு பிடிக்க முடியுமா? எப்படி?

இந்தக் கேள்விகளை கடலுக்கு அடியில் வாழும் கொமரோஸ் பூதம் கரைக்கு வந்து கண்ணனிடம் கேட்டது. விடை தெரியாது கண்ணன் தடுமாறவே "தலைகீழாய் நின்றால் விடைகிடைக்கும் " என்றது. கண்ணன் அறிந்து கொண்டான். உங்களாலும் முடியாவிட்டால் தலைகீழாய் நின்று பாருங்கள்.

-சுழியோடி-


**விடைகள்:**

1 வில்லோ மரம்
2 ஓர் இசைக்கருவி.
3 கிவி
4 திமிங்கிலம்
5 தென்னாபிரிக்க வைத்தியரான கிறிஸ்ரின் பேனாட்
6 நெடிகத் நெசார்
7 எம்.டுரிங்
8. வெனிசுவெலாவில் உள்ளது.(ஆழம் 979 மீற்றர்)
9. வட இந்தியாவில் நடைபெறும் ஒரு இந்துத் திருவிழா.
10. ஆதாமிற்கும், ஏவாளுக்கும் தொப்புள் இருக்காது.
ஏனெனில் இருவரும் தாயின் வயிற்றிலிருந்து பிரசவமாகவில்லையே.

-சுரநாதீர-

உங்கள் ஆக்கங்கள், விமர்சனங்கள் என்பவற்றை ஆர்வத்தோடு அம்பலம் எதிர்பார்க்கின்றது. அவற்றை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

அம்பலம்
305, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.



நாட்டின் நலம்
சிறு சேமிப்பு
வீட்டின் பலம்

தீ மூட்டுகிறாய்
சிகரெட்டுக்கல்ல
உன்நுரையீரல்களுக்கு!


யாழ்ப்பாண வணிக நிலையம்

மொத்த, சில்லறை வியாபார சேவை

திருப்தி
நம்பிக்கை
தரம்
மலிவு

Jaffna traders,
302, Hospital Road, Jaffna. T.P.No.: 2805